1972 ஆகஸ்ட் 18]

உலக வங்கி

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் (திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உலக வங்கியைச் சேர்ந்த பிரமுகர்கள் கடந்த செப்டம்பர் மாதம் சென்னைக்கு வந்திருந்தபோது அவர்கள் தரும் கடன் தொகையை வினியோகித்தல், நிர்வகித்தல் போன்ற யோசனைகளையும் நிபந்தனைகளையும் திட்டத்தைச் செயல் படுத்தும் முறைகளையும் தமிழக அரசினருக்குத் தெரிவித்தார்களா ?

(இ) அதன் விவரங்கள் என்ன?

(உ) அவர்கள் கூறிய யோசனைகளைச் செயல்படுத்தும் வகையில் இங்கு அமுலாகி வந்த நடைமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா ?

(எ) ஆம் எனில், அந்த விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கேள்வி கேட்ட உறுப்பினரைக் காணவில்லை. (அ), (இ), (உ) & (எ) விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

* 64. Q.—THIRU S. JAYARAMA REDDIAR (on behalf of THIRU R. KRISHNASWAMY NAIDU): Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(a) whether it is a fact that the World Bank has come forward to sanction loans for agricultural development as a result of negotiations held at Washington between the World Bank and the delegates under the leadership of the President of Tamil Nadu Land Development Bank; and

(b) if so, the details thereof?

உலக வங்கி

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் (திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு சார்பில்): மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் தலைவர் தலைமையில் அமெரிக்கா சென்ற தூதுக்குழு வாஷிங்டனில் உலக வங்கி

@ 180–181-ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

யுடன் பேச்சு நடத்தியதின் விளைவாக தமிழக விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்காக கடன் வழங்க உலக வங்கி முன் வந்திருப்பதாய்க் கூறப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்ய தமிழ்நாடு அரசின் சார்பில் நிதித்துறை காரியதரிசி, நிலநீர் இயக்குநர், விவசாய இணை இயக்குநர் (பொறியியல் துறை) ஆகியோர் வாஷிங்டனுக்கு 1971 ஏப்ரல்-மே திங்களில் சென்று பேச்சு வார்த்தை நடத்தி வந்தனர். தமிழ்நாடு நிலவள வங்கியின் சார்பில் அதன் தலைவர் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டார்.

(இ) அவையின் முன் உடுக்குறியிட்ட வினு எண் : 32 பிரிவு (அ) & (இ) க்கும் உடுக்குறியிட்ட வினு எண் 138 பிரிவு (இ) க்கும் விடையாக 30—3—1972 தேதியன்று வைக்கப்பட்ட அறிக்கையைக் காண்க.

Co-operative Modern Rice Mill at Talayuthu.

* 65 Q.—THIRU AYYANAN AMBALAM (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether it is a fact that the Co-operative Modern Rice Mill at Talayuthu, Tirunelveli district, has not commenced functioning for more than eighteen months after inauguration;

(*b*) if so, the reason thereof; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter ?

கூட்டுறவு நவீன அரிசி ஆலை, தாழையூத்து

திரு. அய்யணன் அம்பலம் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்தில் உள்ள கூட்டுறவு நவீன அரிசி ஆலை, அது தொடங்கப்பட்டு பதினெட்டு திங்களுக்கு மேலாகியுங்கூடச் செயல்படத் தொடங்கவில்லை யென்பது உண்மையா ?